# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>இலங்கை இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கத்திற்காக இந்திய உயர் ஸ்தானிகர் ஒழுங்கமைத்த வரவேற்புபசாரம்</u>**

இலங்கை இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கத்தினை – (SLIPFA) கௌரவிக்கும் வகையில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் வரவேற்புபசாரம் ஒன்றை ஒழுங்கமைத்திருந்தார். கௌரவ சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சரும் SLIPFA தலைவருமான டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ அவர்கள் தலைமையில் SLIPFA பேராளர்கள் 2025 ஆகஸ்ட்டில் இந்தியாவுக்கு மேற்கொண்ட வெற்றிகரமான விஜயத்தின் அடிப்படையில் இந்த வரவேற்புபசாரம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

2. இங்கு உரை நிகழ்த்திய உயர் ஸ்தானிகர் அவர்கள் இந்தியாவையும் இலங்கையையும் பிணைக்கும் ஆழ வேரூன்றியுள்ள, நாகரீக அடிப்படையிலானதும் மக்களை மையமாக கொண்டதுமான, உறவுகள் குறித்து சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் 2025 ஏப்ரல் மாதம் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க விஜயத்தினை இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்ந்திருந்த அவர், அந்த விஜயமானது இருதரப்பு உறவுகளை மீள வரையறை செய்த தருணம் என விவரித்திருந்தார். மேலும், இந்த விஜயத்தின் மூலமான பெறுபேறுகளின் முக்கியத்துவத்தையும் அவர் குறிப்பிட்டிருந்தார், அவற்றில் குறிப்பாக பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை, வலுச்சக்தி ஒத்துழைப்பு, பாதுகாப்பு, டிஜிட்டல் பரிமாற்றங்கள், ஆளுமை விருத்தி, சுகாதாரம், ரயில்வே மற்றும் இலங்கையின் கிழக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தி உதவிக்கான திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் உள்ளடங்கும்.

3. பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்கும் இடையில் காணப்படும் சமாந்தரமற்ற பங்குடமைகளுக்கு மத்தியில் அயல்நாடுகளுடன் உறவுகளை கட்டி எழுப்புவதில் இந்தியா முன்னுதாரணமாக திகழ்வதாக உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார். இந்தியா இலங்கை இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையிலிருந்து கிடைக்கப்பெறும் வாய்ப்புகளைக் காட்டிலும் இந்தியா தனது பாரிய சந்தையில் இலங்கைக்கு அதிகளவான வாய்ப்புகளை வழங்குகின்றது. அத்துடன் இந்தியா வளர்ந்து வரும் ஒரு நாடாக இருக்கும் அதே சமயம், இலங்கை 2022 காலப்பகுதியில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தபோது கணிசமானதும் நிபந்தனையற்றதுமான ஆதரவை வழங்கியிருந்ததாகவும் அவர் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தார்.

4. உலகின் வளர்ச்சிக்கு முக்கியமான ஊக்கியாக காணப்படும் அதே சமயம் உலகளவில் நான்காவது பாரிய பொருளாதாரமாகவும் திகழும் இந்தியாவின் வலுவான பொருளாதார வளர்ச்சி குறித்தும் உயர் ஸ்தானிகர் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துரைத்திருந்தார். சமாதானம் மற்றும் கடல் பாதுகாப்பு ஆகியவற்றினை உறுதிப்படுத்துவதிலும், விதிகளை அடிப்படையாகக் கொண்ட பிராந்திய ஒழுங்குகளை மேம்படுத்துவதிலும்

இந்தியாவும் இலங்கையும் இயற்கையாகவே பங்காளர்களாக இருப்பதாகவும் உயர் ஸ்தானிகர் இங்கு தெரிவித்தார்.

5. இந்நிலையில், கலந்துரையாடல்களை விஸ்தரிக்கவும், பரஸ்பர நலன்களை மேம்படுத்துவதற்கும், ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகளை கண்டறிவதற்கும் தனித்துவமிக்க தளமாக இந்த பாராளுமன்ற நட்புறவு சங்கம் தொடர்ந்து பணியாற்றுமென்ற நம்பிக்கை இருப்பதாக உயர் ஸ்தானிகர் இங்கு குறிப்பிட்டு இருந்தார்

6. இதேவேளை இங்கு உரை நிகழ்த்திய கௌரவ சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ அவர்கள், இலங்கை இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் 23 உறுப்பினர்களை அழைத்தமைக்காக இந்திய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்த அதேவேளை புதுடில்லியில் இடம்பெற்ற சந்திப்புகள், குறிப்பாக பொது சுகாதாரம், அனைவருக்கும் கிடைக்கக்கூடிய மருத்துவ வசதிகள், கல்வி, தொழில் பயிற்சி மற்றும் கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இடம்பெற்ற ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் தொடர்பாகவும் இங்கு குறிப்பிட்டிருந்தார். அது மட்டுமல்லாமல் இப்பேராளர்கள் முன்னணி சுகாதார நிறுவனங்கள் மற்றும் வளர்ந்து வரும் ஆரம்ப தொழில் நிறுவனங்களுக்கும் விஜயங்களை மேற்கொண்டிருந்தனர். இதேவேளை இந்திய பாராளுமன்ற நடைமுறைகள் தொடர்பாக அறிந்து கொண்டமை, சட்டசபை செயற்பாடுகள் குறித்த அவதானம் போன்ற பெறுமதியான அனுபவத்தை வழங்கியது என்றும், இந்த விஜயம் மூலம், இந்தியாவின் தற்போதைய பொருளாதார மாற்றத்தின் நேரடி அனுபவத்தையும் பெற முடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

7. இந்த வரவேற்புபசாரத்தில் இலங்கை-இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். பொதுவான ஜனநாயக பெறுமானங்கள், பரஸ்பர மரியாதை மற்றும் பிராந்திய அமைதி மற்றும் செழுமைக்கான பொதுவான பார்வை ஆகியவற்றின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையில் கட்டமைக்கப்பட்ட ஆழமான உறவுகளை இந்த நிகழ்வு மீண்டும் உறுதிப்படுத்தியது.

************

**கொழும்பு**
**12 செப்டெம்பர் 2025**